செய்தி வெளியீடு எண். 162 நாள் : 23.03.2017

**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கணினிமய கட்டுப்பாட்டு மையத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்து பார்வையிட்டார்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கணினிமய கட்டுப்பாட்டு மையத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (23.03.2017) திறந்து வைத்து பார்வையிட்டு கூறியதாவது

திருவள்ளூர் மாவட்டத்தில் 24 மணி நேரமும் செயல்படும் ஒருங்கிணைந்த கணினிமைய கட்டுப்பாட்டு அறை செயல்பட்டு வருகிறது. இந்த அறையில் உள்ள அரசு பணியாளர்கள் அனைத்து புகார்களையும் பதிவேட்டில் பதிவு செய்து கொள்வார்கள். இக்கட்டுப்பாட்டு அறைக்கு கட்டணமில்லா தொலைபேசி எண். 1077-ல் தொடர்பு கொண்டு புகார் அளிக்கலாம், அதுமட்டுமில்லாமல் வாட்ஸ் அப் உடன் கூடிய அலைபேசி எண். 75488 46803 மற்றும் தொலைபேசி எண். 044 2766 5248-ல் தொலைநகல் (பேக்ஸ்) எண். 044 2766 2454 ஆகிய எண்களை தொடர்பு கொண்டு புகார்களை அளிக்கலாம். இந்த கட்டுப்பாட்டு அறையில் காவல் துறையின் ஒயர்லெஸ் ஒலிபரப்பு முறை பொருத்தப்பட்டுள்ளது, அதுமட்டுமில்லாமல் வருவாய் துறை மற்றும் ஊரக வளர்ச்சி துறையின் ஒயர்லெஸ் ஒலிபரப்பு முறை ஆகியவை பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உடனுக்குடன் தகவல் தெரிவிக்கப்பட்டு நடவடிக்கை துரிதமாக எடுக்கப்படும்.

புகார் தெரிவிக்கும் நபர்களுக்கு அவர்களின் கைப்பேசிக்கு குறுஞ்செய்தி ஒன்று அனுப்பப்படும். அதில் புகாரின் நிலவரம் குறித்து தெரிந்துகொள்ளலாம். இந்த கட்டுப்பாட்டு அறையில் குடிநீர் சம்மந்தப்பட்ட புகார்கள், பேரிடர் தொடர்பான புகார் மற்றும் ஆற்றுப்படுகைகளில் மணல் அள்ளுவது, மணல் கடத்துவது போன்ற புகார்களை தெரிவிக்கலாம். அதற்குரிய நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு புகார் அளித்தவருக்கு அதன் விவரம் தெரிவிக்கப்படும் என்று கூறினார்.

இந்நிகழ்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கே. முத்து, உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு. கமல் கிஷோர், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ம.கருப்பையா, அலுவலக மேலாளர் (பொது) திரு. நரசிம்மன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~